**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

IN THE COURT OF : Sessions Court for trial of Communal Clash Cases in Southern Districts Madurai.

Calender : **SC.No. 03/2009**

Miscellaneous :

Preliminary Register :

Sessions :

Deposition of witness for **Prosecution** அ.சா.**26**
**Defence**
**Court**

**Name** **:** **முகம்மதுஅலிஜின்னா**

Father's/Husband Name :

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of **11.01.2023**

**முதல் விசாரணை**:

நான் தற்போது தென்காசியில் மலையான் தெருவில் குடியிருக்கிறேன். நான் பெங்களூரில் கேண்டீனில் பணி புரிந்துவருகிறேன். 2005 ம் ஆண்டில் இருந்தே பெங்களூரில் வசித்துவருகிறேன். 2007 ம் ஆண்டு தென்காசியில் இருதரப்பினரும் மோதிக்கொண்டு பிரச்சனை ஏற்பட்டது என்று கேள்விப்பட்டேன். ஆபாத் பள்ளிவாசல் தெரு எஸ்.பி.எம்.கனி மகன்

முகம்மது முஸ்தபா என்பவர் நண்பர் இல்லை. தென்காசியில் வாகினி தியேட்டர் உள்ளது. புகார்தாரர் அலாவுதீன் என்பவரையும் எனக்கு தெரியாது. ஆஜர் எதிரிகளை தெரியாது. 2007 ம் ஆண்டு போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**<u>இந்நிலையில், இந்த சாட்சியினை பிறழ்சாட்சியாக விசாரிக்க அரசு தரப்பில் அனுமதிகோரப்பட்டு, அதன்பேரில் அனுமதி வழங்கப்பட்டது</u>**:-

**<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

என்னை போலீசார் விசாரித்தார்கள் என்றும் அப்போது 14.08.2007 அன்று காலை 10.15 மணிக்கு கூலக்கடை பஜாரில் எனது உறவினர்கள் மூவர் வெட்டி கொலை செய்யப்பட்டார்கள் என்றும் நான் கூறியிருக்கிறேன் என்றால் சரியல்ல. போலீசார் விசாரித்தபோது மேற்படி சம்பவத்திற்கு 6 தினங்களுக்கு முன்னர் நானும் எனது நண்பர் முகம்மதுமுஸ்தபாவும் நடைபயிற்சிக்காக சென்றுகொண்டிருநதபோது அவசரகடனை கழிக்க வாகினி தியேட்டர் அருகில் ஒரு கோட்டைசுவர்போல் இருந்த இடத்தில் இரவு நேரம் என்பதால் மறைந்துநின்று சிறுநீர் கழித்து கொண்டிருநதோம் என்றும் அபப்போது அந்த வழியே வெள்ளை நிற அம்பாசிடர் கார் ஓரமாக நிறுத்தப்பட்டது என்றும் அந்த வாகனத்தின் பதிவெண்ணை பார்க்கஇயலவில்லை என்றும் காரின் பின்னால் இருந்த இருவர் இறங்கினார்கள் என்றும் ஒருவர் கார்பேனட்டை திறந்து ஏதே பார்த்துக்கொண்டிருந்தார் என்றும் அதில் ஒருவர் பேசிக்கொண்டதில் இருந்து அவர்கள் இருவரும் செந்தில் மற்றும் சுரேந்தர் என்று தெரிந்துகொண்டேன் என்றும் சொன்னால் சரியல்ல. அப்போது செந்தில் என்பவர் சுரேந்தர் என்பவரிடம் நீ அப்துல்லாவை பார்த்துக்கொள், நான் ஹனிபாவை பார்த்துக் கொள்கிறேன் என்றும் அவர்களுடன் வருபவர்களை அலெக்ஸ்,

முத்து , கண்ணன் ஆகியோரும் அவர்கள் கொண்டுவரும் நபர்களும் பார்த்துக்கொள்வார்கள் என்றும் எதுஎவ்வாறு இருந்தபோதிலும் அலாவுதீன் பிக்ஸ் பண்ண இடத்தில் நாம்தான் ஜெயிக்கனும் என்று கடையநல்லூர் அரிவாள் செய்து கொடுத்த நபர் யாரிடமாவது சொல்லி விசயம் வெளியே தெரிய வாய்ப்புள்ளது என்றும் கூறவே மாரியப்பன் யாரிடமும் அவ்வாறு சொல்லமாட்டார் என்றும் பேசிக்கொண்டிருககும்போதே வாகனம் சரியாகி விட்டது வாங்கள் போவோம் பேரின்பராஜ் காத்திருப்பான் என்று கூறிக்கொண்டே ஒருவர் வந்தார் என்றும் அவர் பேச்சை வைத்து அலெக்ஸ் என்று தெரிந்துகொண்டேன் என்றும் நான் அப்போது இதை தீவிரமாக நினைக்கவில்லை என்றும் நானும் வெளியூர் சென்றுவிட்டதால் இதை யாரிடமும் சொல்லவில்லை என்றும் கொலை சம்பவம் பற்றி போலீசர் விசாரிப்பது தெரிந்தநிலையில் எனக்கு தெரிந்த சம்பவத்தை கூறலாம் என்று நினைத்து சேரன்மாதேவி காவல் துணை கண்காணிப்பாளர் அங்கு வந்து என்னை விசாரித்தபோது நான் கூறினேன் என்றும் போலீசர் விசாரணையில் கூறியிருக்கிறேன் என்றால் சரியல்ல. தற்போது எதிரிகளுக்கு பயந்து சம்பவத்தின்போது தென்காசியில் இல்லை என்றும் பெங்களூரில் வேலைபார்த்தேன் என்று பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் 2005 முதல் பெங்களூரில் தான் தங்கியிருந்து வேலை பார்க்கிறேன் என்பவதற்கு என்னிடம் ஆவணங்கள் எதுவும் இல்லை. அங்கு நான் பணி புரிந்தது

தொடர்பாக ஆவணங்கள் எதுவும் பதிவு செய்யப்படவும் இல்லை. எனவே, நான் எதிரிகளுக்கு பயந்து பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.**